**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 04.08.2026</u>**

**OS.98/2018**

**பி.வா.சா.1 திரு. சரவணன்**

**பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கும், வாதிக்கும் என்ன உறவுமுறை என்றால் அவர் எனது உறவினர் இல்லை, சீட்டு நடத்திய வகையில் எனக்கு பழக்கம். சீட்டு நடத்தியதாக சொல்கிறேன் எந்த ஊரில் எந்த இடத்தில் சீட்டு நடத்தினார் என்றால் மொரப்பூரில் காவல் நிலையம் அருகில் உள்ள பில்டிங்கில் நடத்தினார். அந்த இடம் வாடகைக்கு இருந்தார்களா அல்லது அவர்களுடைய சொந்த இடமா என்றால் நான் சீட்டுபோடம்போது வாடகை இடம் தற்போது அவர் வாங்கிவிட்டதாக சொல்கிறார்கள். நான் எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டுவரை சீட்டு கட்டிவந்தேன் என்றால் 2015 ல் இருந்து 2017ல் முடித்தேன் அது 20 சீட்டு. நான் எவ்வளவு ரூபாய் மதிப்பு சீட்டு போட்டேன் என்றால் ரூ.2 இலட்சம் மதிப்பில் ஒன்றும், ரூ.5 இலட்சம் மதிப்பில் ஒன்றும் 2 சீட்டு போட்டேன். அது மாதாந்திர சீட்டா அல்லது வேறுவகையான சீட்டா என்றால் மாதாந்திர சீட்டு. அந்த சீட்டை நான் யாரிடம் போட்டேன் என்றால் ரவிச்சந்திரன் என்பவரிடம் போட்டேன். ரவிச்சந்திரனிடம் சீட்டுபோட்டேன் என்று சொல்வதற்கு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் அவ்வாறு சீட்டு போட்டதற்கு கொஞ்சம் ரசீதுகள் கொடுத்துள்ளேன் மீதி ரசீதுகள் தொலைந்துபோய்விட்டது. நான் சொல்வதுபோல எந்த விதமான ரசீதுகளும் நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை, நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. நான் தற்போது சாட்சியம் அளிக்கும் 98/2018 வழக்கு, ஸ்ரீரன் தாக்கல் செய்துள்ளது எவ்வளவு ரூபாய்க்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுள்ளது என்றால் ரூ.5 இலட்சம் என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ரவிச்சந்திரனுக்கு ரூ.5 இலட்சத்திற்கு உண்டான சீட்டு தொகையை செலுத்தினேனா என்றால் செலுத்தினேன். அவ்வாறு 5 இலட்சம் செலுத்தினேன் என்பதற்கு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ல் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்று சொன்னால் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் ஆனால் அது ஏதும் நிரப்பப்படாமல் கையொப்பம் மட்டும்செய்து நான் சீட்டு நடவடிக்கைக்காக கொடுத்தேன்.

3. சித்ரா என்பவர் யார் என்றால் ரவிச்சந்திரன் என்பவரின் மனைவி. அவரும் சீட்டு நடத்தும்போது வருவாரா என்றால் இல்லை. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சித்ரா என்பவரும் சேர்ந்து சீட்டு நடத்தியதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். ரவிச்சந்திரன், சித்ரா, ஸ்ரீதரன் ஆகியோர் கூட்டுசேர்ந்து ஏலச்சீட்டு நடத்தியதாக சொல்கிறேன் அதற்கு ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மொரப்பூரில் வாதி பைனான்ஸ் தொழில் செய்து வந்ததாக சொல்லியுள்ளேன்

அதற்கு நான் ஏதாவது ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள ஸ்ரீதரன் என்பவரிடம் மாதம் மாதம் சீட்டு தொகை செலுத்தியதாக சொல்லியுள்ளேன், மாதம் மாதம் அவ்வாறு நான் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் 20.03.2016 ல் ரூ.18,430/–, 20.04.2016–ல் ரூ.18,950/–, 20.05.2016 ல் ரூ.19950/–, அடுத்த சீட்டு 14ஆவது சீட்டு அது எனக்கு தேதி நினைவில்லை, அப்போது செலுத்தப்பட்ட தொகை ரூ.23,180/– ஆகும். மேற்படி தொகை எல்லாம் நான் ஸ்ரீதரனிடம் தான் கொடுத்தேனா என்றால் இல்லை, ரவிச்சந்திரன் என்பவரிடம் கொடுத்தேன். மாதாந்திர ஏலச்சீட்டு நடத்தும்போது ஒரு அட்டை கொடுத்ததாக சொல்லியுள்ளேன் அது யார் கொடுத்தது என்றால் ரவிச்சந்திரன் என்பவர்தான் கொடுத்தார். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வாதி ஸ்ரீதரன்தான் ஏலச்சீட்டிற்கான அட்டை கொடுத்தாக சொல்லியுள்ளேன் ஆனால் தற்போது சாட்சியத்தில் ரவிச்சந்திரன் என்பவர் கொடுத்தாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

4. தாவா புரோநோட்டை நான் யாரிடம் கொடுத்தேன் என்றால் ரவிச்சந்திரன் என்பவரிடம் கொடுத்தேன். தாவா புரோநோட்டும் வாதி ஸ்ரீதரனிடம்தான் கொடுத்தேன், அதையும் நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதி ஸ்ரீதரன் இடம் கடன் வாங்கியது உண்மை, அந்த கடனுக்காகத்தான் தாவா புரோநோட்டை கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன் ஆனால் தற்போது கடன் தொகை

திருப்பி தராமல் ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.08.04 17:32:15 +0530